2012 மே 10]

எடுத்துவிட்டேன். (குறுக்கீடு) அதையொட்டிய பதில்தான் அவைக் குறிப்பில் இருக்கும். அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்ததனால் அந்தக் கருத்து வராது.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** இந்த அவையிலே பெரிய விஷயமாகச் சொல்ல வேண்டுமென்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், அதை நான் நீக்கிவிட்டேன். அது சம்பந்தமாக பதில் தேவையில்லை.

வினா வரிசை எண் 248, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

248—

அரசு கலைக் கல்லூரி

*__224__—**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, பேச்சிப்பாறை அரசு பழங்குடியினர் உண்டி, உறைவிட மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் அரசு கலைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பத்மநாபபுரம் தொகுதி, பேச்சிப்பாறை அரசு பழங்குடியினர் உண்டி, உறைவிட மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் அரசு கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், ஒரு புதிய கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்றால், கிராமப் பகுதியாக

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருந்தால் 10 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற இடம், அரசு உண்டி, உறைவிடப் பள்ளிக்குச் சொந்தமானது. அந்த இடத்தில் 4.8 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளது. ஆகவே, அந்த இடத்தில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்குவதற்கான வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 249, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

249—

புதிய கட்டடம்

***7667—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு புதிய கட்டடம் கட்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் நுழைவு அனுமதி பெறப்பட்டவுடன், புதிய கட்டடம் கட்டுவதற்கு மதிப்பீடுகள் தயார் செய்து கட்டுமானப் பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*